# அவசரக்கூட்டம்

வெள்ளகோவில் நகராட்சியின் அவசரக்கூட்டம் 2021-ம் ஆண்டு பிலவ வருடம் நவம்பர் மாதம் **18.11.2021–ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு** ஆணையாளர் / தனி அலுவலர் தலைமையில் நடைபெற்று, கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**பொருள் எண் : 1**

நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய இருசக்கர வாகன நிறுத்த குத்தகை காலம் 31.10.2021 தேதி உடன் முடிவடைவதால் மூன்றாவது குத்தகை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 16.11.2021-ல் கோரியதில் ஏலத்தில் ஒருவரும் கோரவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் மட்டும் இரண்டு நபர்கள் கலந்து கொண்டனர். ஒப்பந்தப்புள்ளி விவரம் பின்வருமாறு,

| வ.எண் | பெயர் | ஒரு வருட குத்தகை ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1 | M. சரஸ்வதி, க/பெ. கே.பி. முருகேசன்,<br>52, எல்.ஜி.வலசு, முத்தூர் மெயின் ரோடு,<br>சிவகிரி – 638109 | 3,54,000 /- |
| 2 | M. செல்வம், த/பெ. முத்துசாமி,<br>168, எல்.கே.சி. நகர், வெள்ளகோவில் | 3,50,000 /- |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. M. சரஸ்வதி, க/பெ. கே.பி. முருகேசன் என்பவர் அதிகபட்ச தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்துள்ளார்.

மேற்படி இருசக்கர வாகன நிறுத்துமிட 2018–19 ஆண்டு குத்தகை தொகை ரூ. 3,05,000 /- , 2019-20 ஆண்டில் 3,20,250/- , 2020-21 ஆண்டில் 3,36,263 /-ஆக மூன்றாண்டின் சராசரி ரூ. 3,20,504 /- ஆகும். மேற்படி ஒப்பந்தப்புள்ளி கேள்வித்தொகை மூன்றாண்டின் சராசரியை விட அதிகம் என்பதாலும் கடைசி வருட குத்தகை தொகையில் 5% விட அதிகம் என்பதாலும் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய திருமதி. M. சரஸ்வதி, க/பெ. கே.பி. முருகேசன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்வது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) கடந்த மூன்றாண்டின் குத்தகை சராசரி தொகை விட தற்போது கோரிய ஒப்பந்தக்கேள்வி கூடுதலாக உள்ளதாலும் M. சரஸ்வதி, க/பெ. கே.பி. முருகேசன், என்பவரின் ஒப்பந்தக்கேள்வியை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1709 / 2020 /அ3)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 2**

இந்நகராட்சிக்குக் சொந்தமான பேருந்து நிலைய கடை எண். 2, 5, 10 மற்றும் 11, வாரச்சந்தை உட்புற கடை எண். 12, 13, மற்றும் 15 வரை உள்ள 7 கடைகளுக்கு 16.11.2021–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் நடைபெற்றது. இதில் பேருந்து நிலைய கடை எண். 10, 11–க்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. மற்ற கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு கோரப்பட்ட ஒப்பந்தக்கேள்வித் தொகை விபரம் பின்வருமாறு

| வ. எண் | குத்தகை விபரம் | கலந்து கொண்டவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை (மாத வாடகை, GST இல்லாமல்) |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய கடை எண். 10 | திரு. எஸ். விக்னேஷ்குமார், த/பெ. என். சிவக்குமார்,<br>10ஏ, உப்புப்பாளையம் (அஞ்சல்),<br>வெள்ளகோவில் – 638111 | ரூ. 11000 /- |
| | | திரு. எம். சிவக்குமார், த/பெ. ஆர். முத்துச்சாமிமுதலியார்,<br>8/8, உப்புப்பாளையம் மேற்கு,<br>வெள்ளகோவில்–638111 | ரூ. 11100 /- |

| | | | |
|---|---|---|---|
| 2 | பேருந்து நிலைய கடை எண். 11 | திரு. கே. கோபிநாத், த/பெ. ஆர். கந்தசாமி, 17/18ஏ, அண்ணாநகர், தாராபுரம் ரோடு, வெள்ளகோவில் – 638111 | ரூ. 11100 /- |
| | | திரு. கே. ராஜ்குமார், த/பெ. ஆர். கந்தசாமி, 17/18டி, அண்ணாநகர், தாராபுரம் ரோடு, வெள்ளகோவில்–638111 | ரூ. 11000 /- |

மேற்படி பேருந்து நிலைய கடை எண். 10–க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எம். சிவக்குமார், த/பெ. முத்துசாமிமுதலியார் என்பவரின், ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை மேற்படி கடையின் மாத வாடகையாக ரூ. 11100 /- (GST கூடுதலாக) தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களால் அமைக்கப்பட்ட வாடகை மறுமதிப்பீடு கண்காணிப்புக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட தொகையைவிட கூடுதலாகும். எனவே மேற்படி கோரப்பட்ட அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்விதாரருக்கு கடையின் குத்தகை உரிமத்தை ஒப்படைப்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

மேற்படி பேருந்து நிலைய கடை எண். 11–க்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. கே. கோபிநாத், த/பெ. ஆர். கந்தசாமி என்பவரின், ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை மேற்படி கடையின் மாத வாடகையாக ரூ. 11100 /- (GST கூடுதலாக) தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களால் அமைக்கப்பட்ட வாடகை மறுமதிப்பீடு கண்காணிப்புக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட தொகையைவிட கூடுதலாகும். எனவே மேற்படி கோரப்பட்ட அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்விதாரருக்கு கடையின் குத்தகை உரிமத்தை ஒப்படைப்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது

<u>அலுவலககுறிப்பு</u>

பேருந்து நிலைய கடை எண். 10 மற்றும் 11-க்கு அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை கோரிய ஒப்பந்ததாரர்களுக்கு கடையின் குத்தகை உரிமத்தை ஊர்ஜிதம் செய்து அனுமதி வழங்கலாம்.

(கோப்பு எண். 1380 / 2021 / பி1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

<u>பொருள் எண் : 3</u>

வெள்ளகோவில் நகராட்சிக்கு 2021-22–ம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 270.50 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 20543 / 2021 / பி 2, நாள். 16.11.2021-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **நீளம் (கி.மீ)** | **மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| **1** | வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட செங்காளிபாளையம் ரோடு கணபதி நகர் மேற்கு சாலை 1–வது வீதி, செங்காளிபாளையம் சாலை கணபதி நகர் 2–வது வீதி தெற்கு / வடக்கு, செங்காளிபாளையம் சாலை கணபதி நகர் 3–வது வீதி தெற்கு / வடக்கு, தாராபுரம் சாலை முதல் சேரன் நகர் 1–வது வீதி மேற்கு / கிழக்கு, தாராபுரம் சாலை முதல் சேரன் நகர் 2–வது வீதி மேற்கு / கிழக்கு, தாராபுரம் சாலை முதல் சேரன் நகர் 3–வது வீதி மேற்கு / கிழக்கு, வி.பி.எம்.எஸ். நகர் 1–வது வீதி மேற்கு / கிழக்கு, வி.பி.எம்.எஸ். நகர் 2–வது வீதி மேற்கு / கிழக்கு (ஓம்சக்தி கோவில்), வள்ளியரச்சல் சாலை 1–வது வீதி மேற்கு / கிழக்கு, வள்ளியரச்சல் சாலை 2–வது வீதி மேற்கு / கிழக்கு, வள்ளியரச்சல் சாலை 3–வது வீதி மேற்கு / கிழக்கு, கல்லாங்காட்டுவலசு 1–வது வீதி வடக்கு / தெற்கு (கோவில் அருகில்), கல்லாங்காட்டுவலசு திருமங்கலம் சாலை, ஈரோடு ரோடு சுபஸ்ரீமஹால் அருகில் சாலை கிழக்கு / மேற்கு, டிசி ரோடு முதல் உப்புப்பாளையம் சாலை வையாபுரி நகர் எதிர்புற சாலை, சொரியங்கிணத்துப்பாளையம் சாலை முதல் சர்வாலயம் சாலை 1–வது காலனி மேற்கு வீதி, சொரியங்கிணத்துப்பாளையம் சாலை முதல் | 3.924 | 270.50 |

| வ. எண் | வேலையின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | சர்வாலயம் சாலை 2–வது காலனி மேற்கு வீதி (மந்திரகுமார் அருகில்), செம்மாண்டம்பாளையம் சாலை பெரியசாமி வீதி மேற்கு / கிழக்கு, கரட்டுப்பாளையம் 1–வது வீதி மேற்கு / கிழக்கு, திருச்சி கோவை ரோடு முதல் சீரங்கராயகவுண்டன்வலசு சாலை 1–வது வீதி மேற்கு / கிழக்கு மற்றும் திருச்சி கோவை ரோடு முதல் சீரங்கராயகவுண்டன்வலசு சாலை 2–வது வீதி மேற்கு / கிழக்கு ஆகிய பகுதிகளில் புதியதாக தார்சாலைகள் அமைத்தல் | | |

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1149 / 2021 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 4**

வெள்ளகோவில் நகராட்சிக்கு 2021-22-ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 200.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 96, நாள். 02.11.2021 மூலம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதில் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | **வெள்ளத்தடுப்பு**<br>iii) வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட சொரியங்கிணத்துப் பாளையம் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 171.40 |
| 2 | **இதரப்பணிகள்**<br>ii) இயக்குதலும், பேணுதலும் பரவலாக்கப்பட்ட நுண் உர மையம் – வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட ஈரோடு ரோடு மேற்கு மற்றும் சிவநாதபுரம் பகுதியில் அமைந்துள்ள பரவலாக்கப்பட்ட நுண் உர மையத்திற்கு பணியாளர்கள் சப்ளை செய்தல் | 20.40 |
| 3 | **இதரப்பணிகள்**<br>ii) இயக்குதலும், பேணுதலும் வள மீட்பு மையம் – வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட சொரியங்கிணத்துப்பாளையம் பகுதியில் அமைந்துள்ள வள மீட்பு மையத்திற்கு பணியாளர்கள் சப்ளை செய்தல் | 8.20 |
| | **மொத்தம்** | **200.00** |

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1372 / 2021 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 5**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 21–ல் உள்ள சிவநாதபுரம் விநாயகர் கோவில் வடபுறம் உள்ள ஆழ்குழாய் கிணறு மூலம் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் உள்ள சின்டெக்ஸ் டேங்க் பழுதடைந்து உடைந்துள்ளதால் குடிநீர் விநியோகம் முற்றிலுமாக தடைபட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீட்டு ரூ. 38,000 /–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்தப் பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1644 / 2021 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 6**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 21–ல் உள்ள செங்காளிபாளையம் ரோடு பகுதியில் ஆழ்குழாய் கிணறு மூலம் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் உள்ள சின்டெக்ஸ் டேங்க் பழுதடைந்து உடைந்துள்ளதால் குடிநீர் விநியோகம் முற்றிலுமாக தடைபட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீட்டு ரூ. 35,000 /–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இந்தப் பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1640/ 2021 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 7**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1–ல் உள்ள உப்புப்பாளையம் காலனி பகுதியில் ஆழ்குழாய் கிணறு மூலம் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி சின்டெக்ஸ் டேங்கில் ஏற்பட்ட பழுதுகள் காரணமாக சின்டெக்ஸ் டேங்க் உடைந்துள்ளதால் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளதால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீட்டு ரூ. 38,000 /–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்தப் பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1598 / 2021 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 8**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04–ல் உள்ள உப்புப்பாளையம் ரோடு முத்துக்குமாார் நகரில் ஆழ்குழாய் கிணற்றில் சின்டெக்ஸ் டேங் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் சின்டெக்ஸ் டேங் விநியோகக் குழாயில் ஏற்பட்ட பழுது காரணமாக குடிநீர் விநியோகம் தடைபட்டுள்ளது. மேற்படி பழுதினை சரிசெய்து தரகோரி வைகை. K. மணி, முன்னாள் 4–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர், கோரிக்கை மனு அளித்துள்ளார். மேற்படி விநியோகக் குழாயில் உப்பு படிமம் படிந்து குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் மேற்படி விநியோகக் குழாய்களை மாற்றியமைக்க வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது. எனவே மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீட்டு ரூ. 1,50,000 /–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இந்தப் பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1577 / 2021 / இ1)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண் : 9**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12-ல் உள்ள புள்ளசெல்லிபாளையம் பகுதியில் ஆழ்குழாய் கிணற்றில் Air Compressor மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் ஆழ்குழாய் கிணற்றில் மரத்தின் வேர்கள் சென்று அடைப்பு ஏற்பட்டுள்ளதால் அதில் பழுது ஏற்பட்டுள்ள குழாயினை வெளியில் எடுக்க முடியாத நிலையில் உள்ளது. இதனால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீட்டு ரூ. 60,000 /–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) இந்தப் பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகரிக்கப்படுகிறது.

(கோப்பு எண். 1639 / 2020 / இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 10</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் மேற்கொள்ளப்படும் / மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகளை பொதுமக்கள் அறிந்திடும் வகையில் விதிமுறைகளக்கு உட்பட்டு நாளிதழ்களில் விளம்பரம் வெளியிட மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்காணும் நாளிதழ்களில் விளம்பரம் வெளியிட்டமைக்கு கீழ்கண்டவாறு பட்டியல்கள் வரப்பெற்றுள்ளன.

1) தினத்தந்தி நாளிதழ் – ரூ. 15,372 /-
2) தினகரன் நாளிதழ் – ரூ. 14,000 /-
3) தினமணி நாளிதழ் – ரூ. 21,000 /-
4) தினமலர் நாளிதழ் – ரூ. 34,020 /-

மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட நாளிதழ்களுக்கு காசோலை மூலம் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 715 / 2021 / இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 11</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் 2020-21–ம் ஆண்டு 15–வது மத்திய நிதிக்குழு மானியத் திட்டத்தின்கீழ் Bailing Machine சப்ளை செய்ய திரு. Linga Agri Trading Machinery, Tiruppur என்பவர் மதிப்பீட்டு விகிதத்தைவிட 0.09 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை, நகர்மன்றத் தீர்மானம் எண். 134 / 2021, நாள். 07.06.2021–ன்படி அங்கீகரிக்கப்பட்டு, பணியினை 60 நாட்களுக்குள் முடிக்க வேலை உத்திரவு வழங்கப்பட்டு, மூன்று தினங்களுக்குள் ரூ. 20.00 மதிப்புள்ள சாபா காகிதத்தில் ஒப்பந்தப்பத்திரம் எழுதி, அலுவலகத்தில் ஒப்படைத்து உடன் வேலையை துவக்க உத்தரவு வழங்கப்பட்டது. நகராட்சி மூலம் 25.08.2021, 20.09.2021 மற்றும் 08.10.2021 ஆகிய தேதிகளில் குறிப்பாணை வழங்கியும், நாளது தேதி வரை ஒப்பந்ததாரரால் ஒப்பந்தப்பத்திரம் ஒப்படைக்கப்படவில்லை. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளி / வேலை உத்தரவினை நகராட்சி ஒப்பந்த விதிகளின்படி ரத்து செய்து உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்காக.

<u>அலுவலககுறிப்பு</u>

1) ஒப்பந்தப்புள்ளி / வேலை உத்தரவினை ரத்து செய்ய மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மேற்படி பணியினை மறு ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்த அறிவிப்பு விளம்பரம் வெளியிட மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1434 / 2020 / இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 12</u>**

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சி அலுவலக பொதுப்பிரிவில் 2021 -22–ம் ஆண்டுக்கு கணினிகளை இயக்க 3 நபர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் ஒப்பந்ததாரருக்கு 01.11.2021 முதல் ஒரு மாதத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 339 / 2021, நாள். 29.10.2021–ன்படி அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்து வழங்கிய வேலை உத்தரவு எதிர்வரும் 30.11.2021 –ம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் தற்போதைய ஒப்பந்ததாரரான M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஊதியம் ஒரு நாள் ஒன்றுக்கு ரூ.595/–ஐ (ஆயுள் காப்பீடு தொகை மற்றும் EPF 13.61% உட்பட) ஏற்க மன்ற அனுமதி வேண்டியும் தொடர்ந்து இந்த நிறுவனத்தார் திருப்திகரமாக பணிகளை செய்து வருவதாலும், மேலும் ஒரு மாத காலத்திற்கு மட்டும் (01.12.2021 முதல் 31.12.2021 வரை) மூன்று ஒப்பந்த தட்டச்சர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு ஒரு மாத காலம் பணி நீடிப்பு உத்தரவு வழங்க மன்றத்தின் முடிவிற்கு.

அலுவலககுறிப்பு

இந்நகராட்சிக்கு தட்டச்சர்கள் பணிநியமனம் இல்லாததால், அவசர அவசியத்தினை முன்னிட்டு, 3 வெளிக்கொணர்வு பணியாளர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு 01.12.2021 முதல் 31.12.2021 வரை நீட்டிப்பு செய்யலாம்.

(கோப்பு எண். 631 / 2018 / எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 13**

வெள்ளகோவில் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் துப்புரவு பணி செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி எண். K.Dis.No. 28369 / J3, நாள். 04.12.2018 அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 221 ஆகும். ஆனால் தற்பொழுது 18 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். குறைவான துப்புரவு பணியாளர்களே இருப்பதால் துப்புரவு பணி பாதிக்கப்படாமல் இருக்க இந்நகர்மன்ற தீர்மான எண். 337 / 2021, நாள். 29.10.2021–ன் படி 117 பேர் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் தனியார் மூலம் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 535 /- என்ற தினக்கூலி அடிப்படையில் இந்நகராட்சியில் 21 வார்டுகளிலும் துப்புரவு பணி செய்து பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.11.2021 முதல் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணி காலமானது 30.11.2021-ம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திடமிருந்து 19.05.2021–ம் தேதிய கடிதத்தில் இப்பணி உத்திரவு ஒப்பந்த காலத்தை மேலும் ஓராண்டு காலம் நீடிப்பு செய்து தரவும் தற்பொழுது திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் ந.க.எண். 5453 / 2019 / உ3, நாள். 11.08.2020-ன்படி (2020-2021) ஆம் நிதியாண்டுக்கான தினக்கூலி அடிப்படையில் கணக்கிட்டு ஊதியம் வழங்கவும் கோரி விண்ணப்பித்துள்ளார். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் K.Dis.No. 28369/J3, நாள். 04.12.2018-ன்கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின் அடிப்படையில் தேசிய தாழ்த்தப்பட்டோர் நலவாரியத்தால் அவ்வப்பொழுது நடத்தும் ஆய்வு கூட்டத்தில் தொடர்ந்து வலியுறுத்தப்படுவதாலும் அந்தந்த நிதியாண்டிற்கு திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்பொழுது நிர்ணயம் செய்யும் தினக்கூலி தொகையுடன் EPF, ESI, சீருடை, பாதுகாப்பு உபகரணம், ஆயுள் காப்பீடு மற்றும் நிர்வாக கட்டணமும் கணக்கிட்டு ஊதியத்துடன் வழங்கவும், வெள்ளகோவில் நகராட்சியில் தற்பொழுது 18 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே உள்ளதால், இந்நகராட்சிக்குத் தேவையான துப்புரவு பணியாளர்களின் அளவுகோலில் (221 நபர்கள்) 10% குறைவாகவே உள்ளனர். நகராட்சியிலிருந்து பணியாளர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்ட ஊதியமானது நகராட்சி வருவாயில் 49 % குறைவாகவே உள்ளது. எனவே காலியாக உள்ள துப்புரவு பணியாளர்கள் பணியிடம் போதுமானதாக இல்லாததாலும், அத்தியாவசியப் பணியான துப்புரவு பணி பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தாலும், ஒப்பந்ததாரர் திரு. M/s. துரை அன்கோ அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் தினக்கூலி நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 535 /–ஐ ஏற்க மன்ற அனுமதி வேண்டியும், தொடர்ந்து இந்த நிறுவனத்தார் திருப்திகரமாக பணிகளை செய்து வருவதாலும், M/s. துரை அன்கோ விண்ணப்பத்தை ஏற்று மேலும் ஒரு மாத காலத்திற்கு மட்டும் (01.12.2021 முதல் 31.12.2021 வரை) 117 துப்புரவு பணியாளர்களை விநியோகம் செய்திட காலநீட்டிப்பு செய்திடவும், ஏற்கனவே உள்ள நிபந்தனைகளுடன் வரும் காலங்களில் அரசிடமிருந்தும், நகராட்சியிலிருந்தும் பிறப்பிக்கப்படும் அனைத்து நிபந்தனைகளுடன் சேர்த்து 117 ஒப்பந்த துப்புரவு பணியாளர்களை விநியோகம் செய்ய கொரோனா நோய் தொற்று ஊரடங்கு அமலில் உள்ள காரணத்தால் ஒப்பந்த புள்ளி கோர இயலாது என்பதால் M/s. துரை அன்கோ நிறுவனத்திற்கு ஒரு மாத காலம் பணி நீடிப்பு உத்தரவு வழங்க மன்றத்தின் முடிவிற்கு.

அலுவலககுறிப்பு

நகரின் தூய்மைப் பணி பாதிக்கப்படாமல் இருக்கும் நோக்கில் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு 01.12.2021 முதல் 31.12.2021 வரை ஒருமாதம் மட்டும் M/s. துரை அன்கோ நிறுவனத்திற்கு நீட்டிப்பு செய்யலாம்.

(கோப்பு எண். 469 / 2020 / எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 14**

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு ஒப்பந்த அடிப்படையில் 2021-22–ம் ஆண்டுக்கு கனரக வாகனங்களை இயக்க 4 நபர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் ஒப்பந்ததாரருக்கு 01.11.2021 முதல் இந்நகர்மன்ற தீர்மானம்

எண். 338 / 2021, நாள். 29.10.2021–ன்படி ஒரு மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்து வழங்கிய வேலை உத்தரவு எதிர்வரும் 30.11.2021 –ம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் தற்போதைய ஒப்பந்ததாரரான M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஊதியம் ஒரு நாள் ஒன்றுக்கு ரூ.595/–ஐ (சீருடை, பாதுகாப்பு உபகரணங்கள், ஆயுள் காப்பீடு தொகை மற்றும் EPF 13.61% உட்பட) ஏற்க மன்ற அனுமதி வேண்டியும் தொடர்ந்து இந்த நிறுவனத்தார் திருப்திகரமாக பணிகளை செய்து வருவதாலும், மேலும் ஒரு மாத காலத்திற்கு மட்டும் (01.12.2021 முதல் 31.12.2021 வரை) நான்கு ஒப்பந்த கனரக ஓட்டுநர்கள் சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு ஒரு மாத காலம் பணி நீடிப்பு உத்தரவு வழங்க மன்றத்தின் முடிவிற்கு.

<u>அலுவலககுறிப்பு</u>

பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள கனரக மற்றும் இலகுரக வாகனங்களுக்கு போதுமான ஓட்டுநர் இல்லாத காரணத்தின் அவசர அவசியம் கருதி நகரில் குப்பைகள் தேங்காவண்ணம் சுகாதாரமாக வைக்கவும், வெளிக்கொணர்வு மூலம் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு 01.12.2021 முதல் 31.12.2021 வரை நீட்டிப்பு செய்யலாம்.

(கோப்பு எண். 607 / 2018 / எச்1)

<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>

<u>பொருள் எண் : 15</u>

நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பொதுமக்கள் வரிசெலுத்துவதற்கான அறிவிப்பு செய்ய 03.11.2021 அன்று ஆட்டோ விளம்பரம் மற்றும் துண்டு பிரசுரம் அச்சடிக்க விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு

| ஆட்டோ விளம்பரம் செய்ய வரப்பெற்ற விலைப்புள்ளி விபரம் | | |
|---|---|---|
| வ.எண் | விலைப்புள்ளி அளித்தவரின் விபரம் | நாள் ஒன்றுக்க தொகை (டீசல் உட்பட) |
| 1 | ஜி. உதயகுமார், ஆட்டோ ஓட்டுநர் | 3250/- |
| 2 | எஸ்.சுரேஷ்குமார் ஆட்டோ ஓட்டுநர் | 3400/- |
| 3 | பெரியசமி ஆட்டோ ஓட்டுநர் | 3300/- |

| துண்டு பிரசுரம் அச்சடிக்க வரப்பெற்ற விலைப்புள்ளி விபரம் | | |
|---|---|---|
| வ.எண் | விலைப்புள்ளி அளித்தவரின் விபரம் | **1/6 size Notice 6000 nos** |
| 1 | Lakshmi Printers | 3400/- |
| 2 | Sumangali Printers | 3350/- |
| 3 | Sun Power Computer | 3200/- |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி தெரிவித்துள்ள திரு. ஜி. உதயகுமார் என்பவருக்கு ஆட்டோ விளம்பரம் செய்ய உத்தரவு வழங்கவும் மற்றும் துண்டு பிரசுரம் அச்சடிக்க குறைந்த விலைப்புள்ளி தெரிவித்துள்ள Sun Power Computer அச்சகத்திற்கு துண்டு பிரசுரம் அச்சடிக்கும் பணிக்கான உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண்.1501/2021/அ1)

<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>

ஆணையாளர் /
தனி அலுவலர்
வெள்ளகோவில் நகராட்சி

18/11/21

## சாதாரணக்கூட்டம்

வெள்ளகோவில் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் 2021-ம் ஆண்டு பிலவ வருடம் நவம்பர் மாதம் **29.11.2021–ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு** ஆணையாளர் / தனி அலுவலர் தலைமையில் நடைபெற்று, கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**பொருள் எண் : 1**

வெள்ளகோவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண். 752/1B-ல் 2.17 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடத்தை குடியிருப்பு மனைகளாக பிரிக்க அனுமதி கோரி திரு. எஸ். முருகானந்தம், த/பெ. சண்முகம் மற்றும் திரு. எம். சதாசிவம், த/பெ. முத்துச்சாமி, 209, சிவநாதபுரம், செங்காளிபாளையம் ரோடு, வெள்ளகோவில், திருப்பூர் மாவட்டம் அவர்களால் மனைப்பிரிவு அனுமதி கோரியது, திருப்பூர் மாவட்டம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் (பொ) அவர்களால் கடிதம் ந.க.எண். 2839 / 2020, தி.மா. நாள். 03.08.2021–ன்படி உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட சாலைகளை மனுதாரர் சொந்த செலவில் வருவாய் உட்பிரிவு செய்து நகராட்சி ஆணையாளர் வெள்ளகோவில் என்ற பெயரில் பட்டா எண். 13083 வழங்கப்பட்டுள்ளது. இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண். 1452 / 2019 / எப்1, நாள். 06.10.221–ன்படி பரிசீலனை கட்டணம் ரூ. 13,200 /–, மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் ரூ. 22,000 /–, நில அபிவிருத்தி கட்டணம் ரூ. 52,700 /– மற்றும் நிலவரிக்கட்டணம் ரூ. 31,200 /– ஆகிய கட்டணங்கள் சலான் எண். 21–22 / 00007508 மற்றும் 00007509, நாள். 02.11.2021–ல் பாரத மாநில வங்கியில் அரசு தலைப்பு எண். 021760800AS22709-ல் கட்டியுள்ளார். எனவே நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் (பொ) திருப்பூர் அவர்களால் ம.வ. / ந.ஊ. (தி.மா), எண். 190 / 2021–ல் தொழில்நுட்ப அனுமதி சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி திட்ட அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 2839 / 2020 / திமா, நாள். 03.08.2021–ல் குறிப்பிட்ட சிறப்பு நிபந்தனைகள் மனைப்பிரிவு உரிமையாளரால் நிறைவேற்றப்பட்டுள்ளதால் மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கலாம்.

(கோப்பு எண். 122 / 2021 / எப்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 2**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7–ல் உள்ள ஈரோடு ரோட்டில் இருந்து அம்மன்கோவில் வீதி செல்லும் பிரிவில் உள்ள வடிகால் மற்றும் பாலம் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் மற்றும் வாகன போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளது. எனவே மேற்படி பாலம் மற்றும் வடிகாலினை சீரமைக்க உள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ. 60,000 /–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்தப் பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1643 / 2021 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 3**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8–ல் உள்ள இந்திராநகர் பகுதியின் வடக்கு பகுதியில் குடிநீர் விநியோகம் சீராக இல்லை என பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றுள்ளன. மேற்படி குடிநீர் விநியோகத்தினை சீரமைக்க மேற்படி பகுதியில் 5” மெயின் குழாயிலிருந்து 8” மெயின் குழாயிக்கு தனி துணை குழாய் அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.10,00,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்தப் பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1642 / 2021 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 4**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12–ல் உள்ள கரட்டுப்பாளையம் பகுதியின் தெற்கு பகுதியில் குடிநீர் விநியோகம் சீராக இல்லை என பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றுள்ளன. மேற்படி குடிநீர் விநியோகத்தினை சீரமைக்க மேற்படி பகுதியில் தனி துணை குழாய் அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.1,45,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்தப் பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1641 / 2021 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 5**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 18, காமராஜபுரம் குறுக்கு வீதியில் கான்கீரிட் சாலை அமைக்கப்பட்டு 15 வருடங்கள் ஆனதால், மிகவும் பழுதடைந்துள்ளதாலும், அதனை சீரமைத்துத் தருமாறு திரு. வேல்பிரகாஷ், த/பெ. நடராஜன், காமராஜபுரம் என்பவர் மனு அளித்துள்ளார். மேற்படி கான்கீரிட் சாலையை புதுப்பிக்க மதிப்பீடு ரூ. 3,20,000 /–க்கு பொறியாளரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்தப் பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1578 / 2021 / இ1)

**தீர்மானம் – அங்கீகரிக்கலாம்**

**பொருள் எண் : 6**

வெள்ளகோவில் நகராட்சியில் 2021-22–ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிக்கு 26.11.2021-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|
| வெள்ளகோவில் நகராட்சி அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டிடம் கட்டுதல் | 10,00,000 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர் | 4.91 % அதிகமாக |
| 2) | வீராகன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்தாரர் | 5.45 % அதிகமாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த **எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர்,** மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தபுள்ளி விதிகளின்படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி, ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். **1463** / 2021 / இ1, நாள். 26.11.2021–ன் மூலம் கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர் மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டை விட **4.91%** கூடுதலாக கொடுத்துள்ள விலை விகிதத்தில் செய்து தர சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

எஸ். சுப்பையா, ஒப்பந்ததாரர், (விலைக்குறைப்பு கடிதத்தின்படி தெரிவித்துள்ள) 4.91% மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(கோப்பு எண். 1463 / 2021 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 7**

வெள்ளகோவில் நகராட்சியில் 2021-22–ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிக்கு 26.11.2021-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.